உ

கணபதி துணை.

தெய்வத்தன்மைபொருந்திய

# இரட்டைப்புலவர்

அருளிச்செய்த

# திருவாமாத்தூர்க்கலம்பகம்.

இஃது

மகாவித்துவான்

யாழ்ப்பாணம் வடகோவை

சபாபதிப்பிள்ளையவர்கள்

மாணாக்கராகிய

சிவப்பிரகாசபண்டிதரால்

பலபிரதிகளைக்கொண்டு பரிசோதித்து

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.



1883.

உ

கணபதி துணை.

# திருவாமாத்தூர்க்கலம்பகம்.

---

## காப்பு.

### விருத்தம்.

தஞ்சமென்றமரர்கெஞ்சத்தானவரதனின்விஞ்ச
வஞ்சவேவருநஞ்சுண்டவழகராமாதையார்க்கு
மஞ்சுசேர்பொழில்சூழ்பம்பைமாறுயரந்தீர்த்தானைக்
கஞ்சநாண்மலர்கொண்டேத்திக்கலம்பகஞ்செய்வோம்யாமே.

---

## நூல்.

### மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

பூமேவுசதுர்முகத்துப்பொலிமறையோன்சடங்கியற்ற,மாமேவுபசுந்துளவமாயனுதகம்பொழியவீராறுவிளக்கெறிப்பவிமையவர்பல்லாண்டிசைப்பப், பாரேழுபாலிகையுட்பல்லுயிருமங்குரிப்பக், குலகிரிகாற்பகிரண்டகூடநெடுங்காவணத்தே, யுலகனைத்துமீன்றளையுயர்மணஞ்செய்தருளினையே. இவை மூன்றுந்தரவு.

அப்போதுமணக்கோலத்தபிராமங்கண்டன்றே
இப்போதும்வானவர்கண்ணிமையாமலிருந்தனரே
பைப்போதுபுயங்கேசர்பாதாளம்போயுமுய
ரப்போயுமீண்டிருவர்காணாதறிந்திலரே
குறையறுத்தசெங்காட்டங்குடியம்மைசட்டுவத்தே
முறையமைத்தகருங்கலத்தேமுடித்தொண்டர்பெருங்கலத்தே
பறையறுத்தபரிகலத்தேபகிர்ந்தகறியமுதினைமீண்

டிறையழைக்கச்சொன்னபோதியமபுரமென்படுமே
மோகமுறுமாயிரமாமுககங்கையொருபாதி
பாகமுறுஞ்செந்துவர்வாய்ப்பசுங்கிள்ளையொருபாதி
சாகைமறையொருபாதிதண்டுளவோனொருபாதி [தாழிசை.
யாகவகைபோயன்றேவருவுருவமாயினையே. இவையாறுந்

மிடறருமொழிசினவிடையொறுவிடையினை
கடவிடர்படவொருகணைவிடுகணையினை
மலரயன்வினவுறுமறைதருமறையினை
பலபடிபலவுயிர்பறைதருபறையினை
யொருவுருழிருவர்முன்னொளிசெயுமொளியினை
தருமறைபதமொடுசடையடர்சடையினை. இவை௬-ம் அராகம்.

ஆனீழல்வடுப்படினுமாகாயம்வடுப்படுமோ
மானீழலிருந்தன்றேவடுப்பட்டதுன்மேனி
இராமனார்க்காரணமோவெரிபொன்மலைவளைத்திளைத்தோ
பராபரமாய்வீற்றிருந்தாய்பம்பைநதிக்கரைதனிலே
ஐவர்க்கும்விநோதமுமாயறிவுமறியாமையுமாய்
வைகைக்குமண்சுமந்தால்வான்கங்கையென்செயுமே
அணிப்புலவர்பெருமிதமோவல்லதுநின்றமிழறிவோ
மணிப்பலகைக்கீழ்நின்றாய்மறைகிடந்துமுறையிடவே
அச்சமற்றவிடமன்றேவமுதாய்ப்பின்னமருக்குண்
ணெச்சிலிட்டதல்லவோவேடனெச்சில்விரும்பியதே
செம்பூதமாகியுனைச்சேவிப்பதருமறையே
யைம்பூதத்திருமேனியாரோவுன்னளவறிவார். இவையாறும்
அம்போதரங்கம்.

தேமாத்தூர்பொருந்தினை
தியாத்தூர்முனிந்தனை
யானைத்தூரடங்கினை
யாமாத்தூரமர்ந்தனை.

இவைநான்கும் முச்சீர் ஓரடி அம்போதரங்கம்.

உலகுயிர்த்தனை
யுலகளித்தனை
யுலகெடுத்தனை
மலைவளைத்தனை
கடல்கொளுத்தினை
மழுவலத்தினை
மானெடுத்தனை
மானிடத்தினை.

இவையெட்டும் இரு சீர் ஓரடி யம்போதரங்கம்.

எனவாங்கு. இது தனிச்சொல்.

ஆமாதையினுறையழகியநாதநின்
றேமாமலரடிசிந்தைவைத்திறைஞ்சுதூஉம்
எம்பாவங்கெடவிடர்கெடவிராப்பகல்
பம்பாநதிப்புனல்படிகுதும்யாமே
யோடினுமாடினுமுறங்கினும்விழிப்பினும்
பாடினுந்திருப்புகழ்பாடிக்
கூடினுந்திருவடிகூட்டுங்கோவெனவே. இவையாறுஞ் சுரிதகம்.

வெண்பா.

எனையளிக்குமாமாதையீசர்க்கனங்கா
வினையழிக்கும்வாணயனமொன்று—பனியின்
செருவழிக்கும்வாணயனமொன்றுசேர்மாத
ருருவழிக்கும்வாணயனமொன்று. (உ)

கலித்துறை.

ஒன்றுயிரண்டுருவாயுயர்மூவர்க்குமூற்பத்தியாய்க்
குன்றுதமாதைப்பரஞ்சுடரேகொண்டதண்டமிழ்நூல்
னன்றுகவோவெனினின்றுரையாப்புன்சொனன்மையென்
பொன்றுவெருக்கணிந்தாயதுபோலுமென்புன்சொல்லுமே. ()

கலிவிருத்தம்.

சொல்லாடியவேதங்கடுதிக்கும்பலபூத
மெல்லாமுறைபலவண்டமுமிடுநூபுரவடியா

ரல்லார்பொழிலாமாதையிலையன்றனியுறையுங்
கல்லானிழலெங்கேயதுகண்டார்சிலருண்டோ. (௪)

விருத்தம்.

உண்டிலந்துவர்வாயுற்றிலந்திரடோளுறவுயிர்த்திலமாலோ தியின்மணமுங், கண்டிலந்தமியேங்கலவியின்சமயங்கனிவ ழங்குவதுங்கனவிலுங்கேளோம், வண்டினம்புரளுங்கொன் றையந்தொடையார்மங்கைபங்குடையார்மாதையம்பதியி, ல ண்டர்பைந்தொடிபாலென்பெறுங்கொடியே மறிவினெஞ்சக மேயைம்புலன்களுமே. (௫)

கலித்துறை.

புலம்போனெறிசெலுமீகாமனுலைம்பொறிகலங்கிக்
கலம்போலுடைந்துமுன்னங்குரஞ்சாய்ந்திடக்காய்ந்தமழு
வலம்போதுமாதையைப்பாலித்தநாள்வந்துமாணிக்கப்பூஞ்
சிலம்போடுசேர்த்தனையோகரைசாரத்திருக்கண்வைத்தே. ()

புயவகுப்பு. ஆசிரியச்சந்தவிருத்தம்.

கடல்வாய்தாக்காமுகடுசுடாவெழுகறுவியகரளக்கடுவைக் கவர்ந்தன, கழுநீராற்றுவிழியுமையாளிருகனதனமுகிளக்கல விக்கிசைந்தன, கரையார்நாட்டார்பழுதுபடாதொருகடுபெடுவ லையக்கலையைப்புனைந்தன, கனல்வாய்தோற்றுவருமதசீகரக மலையுரியைத்தெரியப்பிளந்தன, படர்மாலாற்றுவரிவையராரு யிர்பரிவொடுமெலியப்பலியைப்பயின்றன, பறைமோதாற்று வயிரவராகியபரிபுரவரவப்பவனிக்கமைந்தன, படிவாய்கே ட்டார்செவிகள்பொருதொருபடுகொலைமதலைக்கறியைப் பகிர் ந்தன, பகலேபோய்த்தாமதுரையினுவலர்பலகையினுறையப் படிபுக்குயர்ந்தன, புடைசூழ்மாத்தூர்முதுகணநாதர்கள்புரிகு ழல்புகலப்புகழிற்பொலிந்தன, பொடிமீதாட்டாமறையுணர் தாமரைபுலிபணிபரவப்பொதுவிற்புரிந்தன, புரிநூல்சாற்றுவ

ருவிவிடாதிழிபுரையறுபவளக்கிரியிற்றிரண்டன, புரைதீர்வா க்காலுரைதருமூவர்கள்புதியனகவிதைத்தொடையிற் புணர்ந் தன, செடைகூர்பாட்டாலுயர்மறைவேதியர்திருமுகமுளரிக் கொளியைப்புரிந்தன, திருமால்காற்றுமொருகணையாலெழுதி ரிபுரமெரியச்சிலைதொட்டுவென்றன, செகமேழ்காப்பார்திரு மகனுர்தலைதிருகியமகரத்தருகிற்கிடந்தன, திருவாமாத்தூரழ கியநாயகர்செறிதருதவளப்பவளப்புயங்களே. (எ)

கட்டளைக்கலித்துறை. தலைவன்குறைநயந்துரைத்தல்.

புயத்தளவானபுயங்கத்தனுர்பொற்புயங்கத்தனுர்
வயத்தலைமான்மழுவாமாதைநாதர்மலரடிநே
ரியத்தமிழ்வல்லிதன்பால்வந்தகாலமெனவினவ
வயர்த்தனராயினுஞ்சொல்லுமெல்லீர்களுமன்னங்களே. (அ)

விருத்தம். தலைவன்வறும்புனங்கண்டுமறுகல்.

அனத்திற்றிரிவார்காண்பரியாராமாத்தூரிலழகியனு, ரின த்தைச்சேராதவர்போலவென்னெஞ்சுருகு தென்செய்கேன், புனத்திற்காணேன்விளையாடும்பூந்தண்சுனையிற் புறங்காணே ன், வனத்திற்காணேன்வரக்காணேன்மடமானெங்கேகட் மானே. (கூ)

விருத்தம். கழிக்கரைப்புலம்பல்.

மானேகிளியேமயிலேகுயிலேவரிவண்டே
கானேசுனையேகழியேவழையேகான்யாறே
யானேறுடையாராமாத்தூர்சென்றடையார்போ
லூனேவருமேயுயிரோவெனுமேயுய்யாதே. (க0)

விருத்தம்.

தலைவி அருந்தவர்வாய்மைவற்புறுத்தல்.

உய்யாதவிடைகொண்டுதவருதமொழிதந்தொளித்தேகி னும், பெய்யாதமுகில்கொண்டுவந்தாரெமக்கொன்றுபேசாதி

ரார், மையாடுமொருகண்டர்மகிழ்வாகிவளர்கின்றமாமாதை
போ, லையாவுன்மொழிகொண்டுமொழியாயமொழியானதவர்
வாய்மையே. (கக)

## விருத்தம்.

வாரணமுரிசெய்தாருமாதையின்வைகிநஞ்சைப்
பாரணம்பண்ணிஞரும்பாப்பலங்காரஞரும்
நாரணன்றேடிஞருநான்முகன்றேடிஞரு
மாரணம்பாடிஞருமழகியநாதஞரே. (கஉ)

## கலிவிருத்தம். தலைவி புள்ளொடுகிளத்தல்.

அழகியநாயகராமாதைத்
தழைகெழுசோலைத்தாராவே
பொழிபுயலோடுவெர்போஞரோ
விழியகலாதவர்மீள்வாரோ. (கங)

## கலித்துறை.

மீளார்பிறப்பினில்வீழார்நரகினில்வேறெருநூல்
கேளாருயிர்க்கொருகேடுசெய்யார்கிளர்தீவினையின்
மூளார்திருநுதனீறிகழார்பின்னைமுத்தியல்ல
தாளார்தென்மாதையழகியநாதரடியவரே. (கச)

## சந்தவிருத்தம். பருவங்கண்டுபெருமகள்புலம்பல்.

அடியார்பவங்களறநீறணிந்தவரஞர்முடிந்தபரஞர்
வடிவாயவிந்துமுடியாரிருந்தவயன்மாதைதங்குருயிலே
முடியாதகங்குலுறவாகிநின்றுமுதிராதகொண்டலதிரா
விடியாதகொண்டனடுவேதகைந்ததினிவேறுதஞ்சமிலையே.

## தாழிசை. தலைவியாற்றுதத்தன்மைகூறல்.

தஞ்சமில்லவராவிகோலியசாபமூழ்கியசாயக
மஞ்சும்வல்லவராடுபூசலினளவுகாணவடுக்குமோ

மஞ்சுபுல்லியமாடமாளிகைமாதைமேவியநாதனூர்
நஞ்சமேயமுதாகவுண்டருணாதனூர்நுதனயனமே. (கசு)

விருத்தம்.

நயனநகாயுதரழகியநாயகர்நதிபொருமாதையுளார்
பயனுடைமூவர்தம்மனவியலாகியபாவகமாரறிவார் [ள்
உயர்நெறிவேரறவுலகமேலோகமொடொருவெளியாய்விடோ
அயன்முடிமாலைகொடரிமுடிமாலைகொடாடுவேர்பாடுவரே. ()

வஞ்சிவிருத்தம். மெய்தொட்டுப்பயிறல்.

பாடுவையாடுவைபணியோதிக்
காடிடைமூழ்குவைகளிவண்டே
யாடகவில்லிதனுமாதைப்
பீடுடைமானிடைபிழைகாணே. (கஅ)

சந்தவிருத்தம்.

தலைவன்பிரிவு பாங்கியறிந்து தன்மனத்தழுங்கல்.

பிழைத்தபுரங்கணெருப்பெழகின்றவர்பெற்றவரன்பொடு பேசாதே, யழைத்துவிருந்துசமைத்தவுடம்பையழைத்தவர்தங்கியவாமாதைக், கழைக்குண்மறிந்துகுழைக்குளடர்ந்தகறுத்துமடங்கிருகண்ணுறு, செழித்துவளர்ந்துசுழித்தெழுநண்பர் செலுத்துவரின்றுயர்திண்டேரே. (கசு)

தாழிசை. தலைவி கார்காலங்கண்டிரங்கல்.

தேர்வந்தமைகண்டூரெழுதிரைவாரிமுழக்கிக்
கார்வந்தமைகண்டேர்நிலைகண்டேர்வரிவண்டேர்
வார்செஞ்சடைமுடியாருறைமாமாதைமருங்கே
யார்வந்தெனரும்பாவிதனளவேயிரவளவே. (உ0)

விருத்தம்.

அளவிலாதோரறிவிலுமரியயோகப்பெருமையாலு
மெளியராயுமரியராயும்யாருமெய்யேசேருவாரே

யொளிகொண்மாதைப்பதியினூடேயுருவுதங்குமருவுதன்னைத்
தெளிவிலாதாரன்னமாயும்பன்றியாயுஞ்சேர்கிலாரே. (உக)

கட்டளைக்கலித்துறை.

சேர்ந்தெமையாளுஞ்செழுநலப்பாகமுஞ்செவ்வியருள்
கூர்ந்தெழுபச்சைத்திருமேனியுங்கொண்டுகுன்றமொன்றை
வார்ந்தவில்லாகவளைத்தார்விளங்கியமாதையிலே
போந்தவர்போந்திலரேயென்படாதெழுபூதலமே. (உஉ)

கலிவிருத்தம்.

பூண்டமால்பணியாய்புகழ்மாதையா
யாண்டநாயகனேயழலாடியே
வேண்டுவேனிதுவேவிடுகோலது
தீண்டுபோதருள்வாயிதுபோதுமே. (உங)

தாழிசை. தலைவன் மேகமொடுபுலம்பல்.

போதிரண்டுவிழியானவெந்தையிறைபுங்கவன்றெரிவைப
ங்கினன், மாதையம்பதியில்வாரியுண்டுநெடுவான்வளைந்துவரு
மஞ்சுகா, ளாதரம்புதியவம்புகொண்டெழுதுமதனின்மையெ
ழுதியவரையஞ், சோதிகொண்டசுருளோலையங்கைகொடுசு
ரர்விடுக்கவருதூதரே. (உச)

கட்டளைக்கலித்துறை.

தலைமகள் செக்கர்கண்டிரங்கல்.

தூதுநெருக்குமிதழியந்தாரினுந்தோகையர்தங்
காதனெருப்புக்குநீரலவேகமுகாடவிசூழ்
மாதைநகர்ச்சிறந்தாரடியார்தம்மனத்திருந்தார்
கோதையிடத்தமர்ந்தார்திருமேனிக்குட்டிசையே. (உரு)

கலிவிருத்தம். தலைமகள் நிலவுகண்டிரங்கல்.

குடக்குமீதொன்றுபோய்க்குணக்கெழாதலா
லடுக்கவானென்றுவந்தனலைவீசுமால்

மடக்கலாமஞ்ஞைசேர்மாதைநாதனுர்க்
கிடக்கணேன்வலக்கணேனிரண்டுந்திக்கணே. (௨௬)

கட்டளைக்கலித்துறை.

கம்புத்துறையுறைநீலமுமாதைக்கடிநகர்சூழ்
பம்பைத்துறையிலுறையும்பவளமும்பாற்கடல்சூழ்
செம்பொற்சிகரத்திமையத்திலேவந்துசேர்ந்திலரே
அம்பர்க்குவாழ்விலையேயிலையேபுவிக்குற்பத்தியே. (௨௭)

சந்தவிருத்தம். வலைச்சியார்.

பத்திபடுமுதுபேய்கடொக்கதிருநடனுதர்பச்சைமயிலிடமானபெருமான், முத்தரழகியநாதரத்தருறைபுகழ்மாதைமுத்திரைவலைவாணர்மகளார், செய்த்ததுவரிதழுறுபுத்தவமுதினைவாரிசித்தமிவர்கயல்கூறிவரவே, யத்தருலகிதுவாகியித்தரணியதுவாகியப்பொழுதுபுவிமாறுபடுமே. (௨௮)

விருத்தம்.

தலைவன்வருந்தியமைபாங்கிதலைவிக்குரைத்தல்.

மாறுபடவைகைக்குமண்சுமந்தார்மாதைவரிவண்டுபோடச், சோறுவிரிதாழையிடைச் சுரபுன்னைப்பந்தரெலாஞ் சுரிசங் கார்ப்பக்,கூறுபடுகாலலவன்பேடையுடன்குழையுமணங்குறியாதோங்கி, யாறுமழைமின்காட்டவரையிரவிற்றடுமாறுமாவி தானே. (௨௯)

சந்தவிருத்தம்.

தலைவிகையாறெய்திடுகிளவி.

ஆவிதளர்ந்தாய்மேனிபசந்தாயலரானு
யேவிலுழன்றேநாணுமிழந்தாயென்செய்தாய்
வாவுகடும்போரேறுபுரிந்தார்மாமாதைக்
காவலருன்பான்மேவியதுண்டோகழுநீரே. (௩0)

கட்டளைக்கலித்துறை.

தலைவி கலவிநலம்நினைந்துவருந்தல்.

வந்திப்பவர்தம்மனக்கோயில்கொண்டவர்மாதையுள்ளார்
கந்தர்ப்பனைவென்றகண்ணுதலார்கைலைக்கருகே
யிந்தச்சுனைமருங்கேயன்பர்வாழ்வித்தவின்பமெல்லாஞ்
சிந்திக்கினுங்கொண்டல்காளண்டர்வானமுந்தீப்படுமே. (சഠ)

சந்தவிருத்தம். தலைவிகையாறெய்திடுகிளவி.

படமுதுபுயங்கனுடன்மிசைநடஞ்செய்பதயுகசுயம்புபயில் மாதைப், புடைபெருகுபம்பைநதிவளைசொரிந்தபுதுமணல்வி ழைந்தபோதாவே, யிடையனெறிகின்றமரமெனவிருந்தவெ மதளவுநொந்துபாராயே, தடமலிகுடம்பைமலரணைபுகுந்துத மபெடைமணந்ததாராவே. (சக)

கட்டளைக்கலித்துறை.

தாரமன்னுவுடையார்மாதைமேவியசங்கரனார்
பேரொளிமேனிபவளமென்பாரெமைப்பேணுமடி
நாரணனாரறியாரறியார்முடிநான்முகனு
ராரறிவார்பின்னையின்னமுந்தேடுமருமறையே. (சஉ)

விருத்தம்.

அருமறைகட்கெட்டாதவாதியார்நம்மையனூராமாத்தூரழக ஞர்தந், திருவடித்தாமரைமலர்கள்சிவக்கவாடுந்தித்தித்தகூத் திங்கேதில்லையிங்கே, விரிசடைசேர்பழமுனிகாளோடிவாரீர் வியாதனார்மதச்சுனையின்மிதிக்கின்றீரோ,விருதலைக்கொள்ளி யைக்கொண்டே சுள்ளென்றெம்மை யிட்டவாபாவமெலாங் கெட்டவாவே. (சங)

கட்டளைக்கலித்துறை.

தலைமகன் இறைமகளாடிடம்நோக்கி அழுங்கல்.

கெட்டோருறவுகிளையினுமில்லைக்கிளையுருவச்
சுட்டோருறவுபின்சொல்லவுண்டோசுரும்போட்ரும்பி

மட்டோடவிழ்ந்தவிதழியந்தாரையர்மாதைசுற்றும்
நெட்டோடையிலனங்காளுறவாயிங்ஙனிற்கின்றதே. (சச)

மட்டுவிருத்தம். தலைவி மாலைகண்டிரங்கல்.

நின்றுறங்குமுடையாயர்நிரையழைக்குங்குழலோசைநெடுங்கொம்போசை, குன்றிருந்தவரிவேங்கைகொலைமறந்துசெவியேற்குங்குறும்புன்மாலை, மன்றுறைந்தநடநாதர்மதிகரந்தைமுடிநாதர்மாதைமூதூர், அன்றுசென்றகடுந்திண்டேரமர்புலத்துமுண்டோகண்டழைக்குமேதை. * (சரு)

கட்டளைக்கலித்துறை. சம்பிரதம்.

மேலமரேசரினுராயணரில்விதிகளிற்றங்
காலமெலாமுடியுங்கடைநாளிற்களங்கறுக்க
வாலமெலாமுண்டவாமாதையையரடியவர்கைச்
சூலமெடாதவரார்பரவாதிகள்சொல்லுமினே. (சகூ)

மருட்பா.

சொல்லுமி னென்றுநீர் சொல்லுஞ் சொலிவிடா
தில்லுமின் மானிடங்கா ணில்லுமினோ—தொல்லை
மாதையங் கடவுளுங் கடவுள்
சேதிமங் கெழுமு தேவருஞ் சிலரே. (சஎ)

அகவல். பொய்பாராட்டல்.

சில்லிதழ்மலிந்ததெய்வத்தாமரை
முட்டாட்கடியறவுண்டோமட்டவி
ழிதழியந்தொடையழகியநாயகர்
மாதையங்கிரியின்மானோர்
சூதடுகொங்கைசுமந்தநுண் ணுசுப்பே. (சஅ)

---

* கன்றழைக்குமேதியென்றும்பாடம்.

கலிப்பா.

நுண்ணறிவுபறிபோய்நெறிபோய்நுவல்மதுரமொழிபோ
ய்விழிபோ, யுண்மணிகளொளிபோய்விடுநாளுள்ளபடிவிடை
மேல்வருவீர், பெண்ணமுதமிடமானவரேபேய்மருவுமிடமா
னவரே, வண்ணமதிமுடிநாயகரேமாதையழகியநாயகரே. ()

வஞ்சிவிருத்தம். தலைவியைப்புகழ்தல்.

அழகியநாயகர், பழகியமாதையர்
குழைகெழுசாபமே, மழைகெழுசாபமே. (ருo)

இன்னிசைக்கலிப்பா.

பண்ணிலறுமிருதாளரேபாவமறுமிருதாளரே
கண்ணிலமர்தருமானரேகளிறுகுரகதமானரே
யெண்ணில்பலவுகபாலரேயாரும்வெருவுகபாலரே
வண்ணமழகியநாதரேமாதையழகியநாதரே. (ருக)

கட்டளைக்கலித்துறை.

தலைவன் புள்ளொடுகிளத்தல்.

நாதர்க்குநாதரழகியநாதர்நயந்துறையு
மாதைப்புரத்துமடவன்றில்காளுங்கள்வஞ்சியஞ்சிற்
கோதைக்கழகுசெய்கோதையெல்லாமென்குரகதத்தின்
பாதைப்பெருவழியாமழியாவிடம்பார்த்திருமே. (ருஉ)

குறம். சந்தவிருத்தம்.

இருந்தகுறியினிதெழுந்தகருமமதியம்புமொருகுறமென்குற,
மரந்தையொடுதெவமுயன்றபொழுதஃதறிந்ததொருகுறமம்மை
கேள், மருந்துபிறருணவெழுந்தகடுவிடமகிழ்ந்துபுதிதுணுமா
தையார், பொருந்துதொறுமெனைமகிழ்ந்துநினையிதுபொய்க்கி
ல்மறைமொழிபொய்க்குமே. (ருங)

தாழிசை. ஆச்சியார்.

பொய்யிடைச்சியேமெய்ம்முடைச்சியேபுதுவளைச்சியே
பொதுவர்பாவையே,மெய்விலைத்திறம்விழியுரைக்குமேமென்
சொல்கொண்டுநீர்விற்கவேண்டுமோ, மையெறித்தசெங்கந்
ரத்தனூர்மாதுபாகனூர்மாதைவீதியி, லையர்விற்றுவாவென்று
விட்டபாலமுதிடச்சொனூரல்லவல்லியே. (ருச)

கட்டளைக்கலித்துறை. தலைவி சிறைப்புறங்கூறல்.

வல்லிக்கிடந்தந்தமாமாதைநாயகர்வண்டின்கையிற் [த்த
கொல்லைப்பசுங்கொன்றைத் தாருந்தந்தாரில்லை கோலிவை
முல்லைக்கொடியையுந்தேமாவையும்விட்டுமொய்குழலீ
ரல்லிக்கடுக்கையைவைத்திலமேநம்மறிவின்மையே. (ருரு)

சந்தத்தாழிசை. மறம்.

வில்லொடுங்கொம்புபல்லியங்கொம்புவினையடுங்குன்றவி
ல்லிகாள், சொல்லழிந்துங்கண்மன்னவன்பின்புசொன்னசம்
பந்தமென்னடா, வல்லிதன்பங்கன்மைபொருங்கண்டன்மா
தையஞ்சம்புமரபிலெம், மில்லில்வந்தன்றுகொன்டதொன்ற
ன்றியில்லைசம்பந்தமில்லையே. (ருசு)

இன்னிசைவிருத்தம்.

தலைவனீட்த்தலைவிவருந்தல்.

இல்லையானவிருபிறப்பாளனூர்
மல்லன்மாதைமகிழ்நர்பிரிந்தநா
ளெல்லைபோகியுமேகாவெனக்கிது
நல்லகாணிற்றைநாளென்றயாமமே. (ருஎ)

வெண்பா.

யாமாழிமாலையிட்பமெனவெட்கினீ
ராமாதைநாதர்க்கறிவிலிகாள்—தேமாலைப்

போரேறெனுநாமம்பொய்யன்றேநாங்களோ
நீரோமொழிந்தீர்நிலத்து. (ருஅ)

சந்தவிருத்தம்.

காமமிக்ககழிபடர்கிளவி.

நிலவும்பணியுந்தேனிறைகொன்றையுமாரும்நீரும்பேரென் புநிறைசெஞ்சடையார்தம், அலையும்பணிலம்போயணிவீதியி லேறுமாமாதையில்வாழுமாழிப்புள்ளீரே,உலையும்பொங்கழல் போலியானுளம் வெந்தழிகின்றேனுறவும்பாராதே யிரவுந்தே ராதே, மலையுங்கடலும்போய்வைகிப்பெடையோடேவாருஞ் சிறுகாலேயூருஞ்சிறுகாலே. (ருகூ)

சந்தவிருத்தம்.

காலத்தினுயிர்கொள்ளவெதிர்கொள்ளும்யமதூதர்கரசூலமு
மாலித்துவீசுங்கொடும்பாசமும்மென்னையமராடுமோ [ர்
மாலத்திமெய்க்கொண்டுமெகனத்திகைக்கொண்ட மாமாதையா
சூலத்தைமாறுதபாசத்தினூடேயெதிர்த்தாலுமே. (கூ0)

கட்டளைக்கலித்துறை.

ஆற்குழையோவரவோவாயர்பாடியருமனையோ
பாற்கடலோதிங்களோதங்குமாவம்பலபலவாம்
மார்க்கமுமாகிநின்றூர்மாதைநாதர்வலங்கொள்பம்பை
மேற்கரைகோயில்கொண்டார்புரஞ்சீறியவெங்கணைக்கே.*()

வெண்பா. தலைவன் முறுவற்குறிப்புணர்தல்.

வெங்காளமுண்டுவிபுதர்க்கமுதீந்த
கங்காளர்மாதைக்கடுக்கைச்சடைமுடியார்
மங்காவிடைமேல்வருவார்திருநகையோ
நங்காவில்வாழ்வார்நகை.

---

* இப்பாவால் மாதைநாதர்க்கிடப்பாகத்திற் போய பம்பை வலப்பாகம் போகப்பெற்றது.

சந்தவிருத்தம்.

இறைவன்றனக்குக்குறைநேர்பாங்கி
இறையோற்கண்டமைகூறல்.

நகையழற்கொடுபுரமெரித்தவர்நாதர்வித்தகர்மாதையா[ய்கோ
ரிகல்முகப்படையிறைவர்வெற்பினின்யாமிதற்கினியென்செ
மகமிழற்றியகிளிகளைத்துவளளிகளைப்பெயர்வினவியே [ரே.
மகநெருப்பெழ நெடிதுயிர்ப்பொடு வருவரிப்பொழு தொருவ

கட்டளைக்கலித்துறை.

வருக்கைத்தடம்பொழின்மாமாதையையர்க்குமாசொன்றில்
முருக்கொத்தமேனியழகியநாதர்க்குமூச்சரவத் [லா
திருக்கைக்கமலவரனூர்க்கரிதிருத்தேவியன்றே
லரிக்குப்பொருளுரையீர்கெடுவீர்நும்மறிவின்மையே. (சுச)

சந்தவிருத்தம்.

அறிவழியுங்குடிகொண்டநோயன்னைமருந்தினிலாறுமோ
உறுவதுமாதையிடத்திலேயுறைவதுபம்பைமருங்கிலே
பறையுமருந்தொருபாதியும்பச்சைபழுத்தபுறத்திலே
கறுவியதீக்கொடிகண்ணியேகட்டிவிடிலிதுபட்டதே. (சுரு)

வெண்பா.

பம்பாநதிக்கேபழனமாதைப்பதிக்கே
நம்பாவிருந்தனையேநாங்காணக்—கொம்பார்
புதுமுகமாயன்னமாய்ப்பொன்முடிதாள்காணார்
சதுர்முகனூர்தந்தையார்தாம். (சுசு)

அம்மானை.

தந்தைபிடித்தரியத்தாயானவள்சமைக்க
வெந்தவிடக்குய்ந்துமீண்டதுகாணம்மானை
வெந்தவிடக்குய்ந்துமீண்டதுவேயாமாயின்

மைந்தனுறுப்புமணத்ததோவம்மானை
மாதையார்வல்லபத்தான்மணத்ததுகாணம்மானை. ()

ஆரத்தடவயல்சூழாமாதைவாழழகர்
தாரொத்தமேனிதழலொத்ததம்மானை
தாரொத்தமேனிதழலொத்ததாமாயி
னீரக்கங்காநதியாளிருப்பதேனம்மானை
ஈரம்பெருநெருப்புக்கில்லையேயம்மானை. (சுஅ)

## சந்தவிருத்தம். தலைவன் முன்னிலையாக்கல்.

அம்மனைபந்தாயரியகழங்காயங்கையிலணையேனே
மென்மலர்வண்டாய்விரிகழுநீராய்மென்குழலேறுயேனே
கைமறிகொண்டார்கங்கைபுனைந்தார்கந்தரம்வந்தாரும்
மைமுகிலனஞ்சார்மங்கையொர்பங்கார்மாதையில்வருவீரே. ()

## விருத்தம். தலைவன்வறுங்களநாடிவருந்தல்.

வருங்கடகளிற்றினையுரித்தபெருமான்பழனமாதைநகர்வந்தபெருமான், பொரும்புரநெருப்பெழநகைத்தபெருமான்மதன்பொடிபடவிழித்தபெருமான், பெருங்கணையரக்கரையறுத்தகளமோமணிபிறங்கியமணிப்பொடிவிடு, வருங்கடுவிடம்புதியதுண்டகளமோதினையொடரியவவர்சென்றபுலமே. (எ0)

## குறளடிவஞ்சிப்பா.

புலங்குலைந்து மலங்குலைய நவத்துளையுந் தவிர்ந்தொரீஇ
யறிவழிந்து நெறிபாழ்பட் டைமலிந்து மலிந்துகை
மொழித்தமர்கூடி யமராடுங் கழிபிறப்பி லழிகுவெமோ
உழையேந்தி மழவானே றூர்திகீ றணிந்தோனு
மாதைமுதலோன் றூமரைப்பெருந்தகைத்
திருந்தடியிருந்தநம் மிதையபங்கயத்தே. (எக)

கலிப்பா. தலைவன்நீடத்தலைவிவருந்தல்.

தேவிதிருமார்பிலுறைதேவிமணவாளர்
வாவிபுனன்மாதைதனின்வாவிமலர்காளே
யாவிசருகாவதுமுன்றுவியருளாதோ
பாவிமனமேபெருகுபாவிநிலைபாரீர். (எஉ)

தாழிசை. கழிக்கரைப்புலம்பல்.

பாராரும்பிடரும்பகுவாயும்பணமும்பலபத்திச்சிகையுங்கு லதுத்தித்தொகையோ, டாராரும்புனைவாராமாதைப்பதிசூழா ழித்தண்புனலுண்டாலிக்குங்காரே, காராரும்பொழிலேபொ ழில்சூழுங்கழியேகழியோடுங்கயலேகயலுண்டாராவே, நீரா ருந்துறையேதுறையாருந்தடமேநிதமாடுங் குருகேநேயர்செய ற்குருகே. * (எங)

சந்தவிருத்தம்.

தலைவிகுருகொடுகையாறெய்திடுகிளவி.

குருகணைகுருகொடுகுளிர்சிறைசிறையொடுகுளிர்தலைதலை யொடுகூடியே, கருதலகலகொடுகவரடியடியொடுகருவிழிவி ழியொடுமூழ்கியே,வருகரியுரியவர்மறைகமழடியினர்மதிபுனை சடையினர்மாதையார், ஒருகுருகெனவுயிருடல்பிறிதிலையென வுறுபிணியறிகிலரூரரே. (எச)

தாழிசை.

ஊருமாசுணமூர்வபோலுகளொளிசெய்மின்னுடனோடியே
வாரிவாரிவிசும்பெலாமிகமஞ்சனஞ்செயுமஞ்செலா
மேருமால்வரைவில்லியாருயர்வேதமாதையினுதனார்
சேரும்வாள்விழிகடவுதேரவர்சென்றதேரொடுசென்றதே. ()

---

* தாராவே துறையேதுறைநீடுந்தடமே தடமாடுங்குருகே யிடமாடுங்குருகே, என்றும்பாடம்.

வெண்பா.

தேங்கமலநா றுவனதீந்துழாய்நா றுவன
வோங்கிதழிமாலைதனக்குண் மாலை—பூங்கடுக்கைத்
தெய்வப்பெருமான்திருவாமாத்தூருறையுஞ்
சைவப்பெருமான்சடை. (எசு)

விருத்தம். கொற்றியார்.

சடைமௌலிமுடிவேந்தராபிசாரத்தழலின்வருகரியுரித்தத ம்பிரானு, ரடல்மகுடப்புயங்கனுர்திருவாமாத்தூராதியாரருவ மாயுருவமானுர், விடைபொருதவிடைக்கொம்பைத்தோளிவி ட்டார்மெய்யம்பின்கையம்பைவிழியிற்கொண்டா, ருடைய முதலடியளந்தவிடங்களெல்லாமொற்றியாயிடவந்த கொற்றி யாரே. (எஎ)

வஞ்சிவிருத்தம்.

கொற்றமாதையிற்கொற்றவனைத்துழாய்ப்
பெற்றமூரும்பிரமகபாலியை
யுற்றமூவர்க்கொருவரென்றேதுவார்
மற்றநாவுமனங்களும்வாழியே. (எஅ)

விருத்தம். தலைவிநெஞ்சொடுவருந்தல்.

வாழிதணந்தவர்வாழிகடும்பரிவாழிமறைந்தொளிதேர்
வாழிகுறுந்துளிவாழிமதங்கயம்வாழிவளைந்தெழுகார்
காழியில்வந்தவர்பாழியமண்பகைகாதுசெயும்பெருமா
னுழிவிடந்தராழியுகம்பயில்மாதைமருங்கருகே. (எகூ)

கலித்துறை.

தலைவன் தலைவியைமுன்னிலையாக்கல்.

அருங்கானகத்திற்றிருவுந்தியோடைகொண்டங்குநின்றீர்
கருங்காவணங்கொண்டுமுற்பட்டவாறென்கடல்கொளுத்த

வருங்காளமுண்டபிரான்றிருமாதையின்வல்வினையேன்
பெருங்காதல்வெள்ளந்தருங்கடலூடுபிறந்தவரே. (அ0)

## தாழிசை. யோகினியார்.

பிறப்பிலாதொருகுழகனூர்பேணுமாதையிலழகனூர்
பேயொடாடியநாதனூர்வெற்றமேறியபெற்றியா
ரிறப்பிலாதொருதலைமையும்யார்கொலோசிலர்கூறுவா
ரிந்தயோகினிபெருமையுமெங்ஙனேபிறரெண்ணுவா
ரறுத்ததாழ்வடவளமெலாமரியசங்கிலமுந்தவே
யயில்நிறம்புனைகஞ்சுகமமர்ந்தபூதியமாகவே
வெறுத்தகாலர்கள்சூலமேமெய்யில்வைத்தருள்சூலமே
விண்டகண்டகபாலமேகொண்டகொண்டகபாலமே. (அக)

## கட்டளைக்கலித்துறை.

கொண்டகபாலமயனூர்சிரமரிக்கூர்மம்விண்ட
சண்டகபாலமணித்திருக்கோலஞ்சதுர்முகனூர்
கண்டகபாலமெல்லாநெற்றிமாலைக்கழகுசென்னி
யண்டகபாலம்பெறுந்திருமாதையழகருக்கே. (அ௨)

## கலிப்பா.

அழகார்மாதையுளாரணியும்நாராயணரே
குழையும்வானோர்புடைசூழ்குடியும்நாராயணரே
தழையும்நீரூர்சடையார்சடையும்நாராயணரே
விழியின்மேலோர்விழியார்விடையும்நாராயணரே. (அங)

## வெண்பா.

நாராயணனறியாநாட்கமலநாங்காண
வாராதெதிர்நிற்கவல்லீரோ—சீராரும்
பூமாத்தூரத்தரேபொற்பணியூரத்தரே
யாமாத்தூரத்தரேயன்று.

## சந்தவிருத்தம்.

அன்றுபேருழவைமுன்னாணம்பாடவே
மன்றுளாடும்பிரான்மாதைவாழெம்பிரா
னென்றுநீடும்பதமிடைவிடாதேத்தினல்
ஒன்றுதானணுகுமோவுங்கள்பாவங்களே. (அரு)

## வெண்பா.

பாவவினைக்குறும்புபற்றறுக்குங்கொற்றத்தா
டேவர்கபாடந்திறக்குந்தா—ளாவிவிடாப்
பூமாத்தூராற்றுப்பொதிசோறுந்தண்ணீரு
மாமாத்தூரத்தரடி. (அசு)

## மட்டுவிருத்தம். காமமிக்ககழிபடர்கிளவி.

அடியிலிந்துவையமுதுசெய்திடாய்
கொடியதென்றலேகொண்டுவாழ்வியாய்
மடிவில்கொன்றையார்மாதைநாதனார்
விடையில்மொய்ம்பனார்வேணிநாகமே. (அஎ)

## கட்டளைக்கலித்துறை. சித்து.

வேணிமுடிப்பரன்மாதையப்பாலிந்தவேர்கொளுத்தத்
தாணுவெடுத்ததனுவைப்பொன்னாகத்தருங்குளிகை
காணியுருக்கவொருகோடிசெம்பொன்கடுகவொரு
பாணிமுதற்கொண்டுவாகொண்டுவாசொன்னபச்சிலையே. ()

## விருத்தம். இதுவுமது.

பச்சிலைபத்திலோர்பத்மபதத்தொடுபக்கமெரித்திடவே
யிச்சரிகைப்பொதிகற்பமிருக்குமெனக்கிதுவித்தைகளோ
மைச்செறிபொற்பொழின்மாதையொருத்தர் மணிப்பவளத்து
றையு, மச்சவிடத்தினைமற்றிருவர்க்குமருத்தியிருத்துவனே. ()

## கட்டளைக்கலித்துறை.

இருந்தாய்திருமுடிமேல்வளர்ந்தாயெம்பிரானிடத்தே
மருந்தாயவதரித்தாயொருமாதிடமாதையையர்
பிரிந்தாரிருந்தேயரும்பாவிநின்னைப்பிழைத்ததுண்டோ
குருந்தாயெழுந்தவன்றேதழலாய்நின்றகோண்மதியே. (௩௦)

## நேரிசைவெண்பா.

கோளரவுகண்டுக்குறையாப்பிறையணிந்த
காளவிடமுண்டிருண்டகண்டரூர்—பாளைகமழ்த்
தாரும்பொழிலுந்துறையுந்துறைவெண்சங்
கூருந்திருவாமாத்தூர்.

## கலிவிருத்தம்.

ஆமாத்தூரிலழகியநாயகர்
தேமாத்தூரிற்சிறந்தேவருகிலர்
தாமாத்தூரிற்றழுவக்குழையவே
வாமபாகமிடைவடுவானதே. (௩௨)

## கலிப்பா. தலைவன் மேகமொடுசொல்லல்.

ஆனகயலிடைமருவுகமலமுமஞ்சனக்கமலமளவுகமலமும், பானன்முடியவமுதகமலமும்பரவியபசலைமுகிளித கமலமும், வானவர்தலைவரழகர்மாதைசூழ்மருவியகமலமனையில் வளர்வதோர், தூனைதிருமுனமுகில்கள்செல்லுமேதூரகதவிரதவரவுசொல்லுமே. (௩௩)

## சந்தவிருத்தம்.

### தலைவனுருவெளித்தோற்றம்கண்டுளமறுகல்.

சொல்லுவபோலொருசொல்லாடீர் தோய்வதுபோலிருதோடேயீர், நல்குவபோலிதழ்நல்கீர்முன்னருவதுபோலொருநகைத்தாரீர், மல்விடையூர்பவன்மழுவாளிமாதையின்வீதியி

ல்வருவீர்நீ, ரல்லகொலோவயலாமோநீருவழிபோயினதறி
யேனே. (கூச)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம். காலம்.

அயன்மாத்தூரழகரங்கணழலாக்கால
மாமாத்தூரழகரங்கணழலுங்காலம்
மயலாற்றூரணியரங்கமாறுங்கால
மனமாத்தூரணியரங்கமாறுக்காலங்
கயலாற்றூர்மணிமுத்தங்கவருங்காலங்
கடலாற்றூர்மணிமுத்தங்கவராக்கால
மியன்மாட்டேரெம்மிறையினிசைக்குங்கால
மியன்மாட்டேரெம்மிறையினிசையாக்காலம். (கூரு)

கட்டளைக்கலிப்பா. ஊசல்.

காலன்விழும்படியுதைத்தகழலுங்காலுங்
கண்ணனிடுபலியேற்றகையுமோடுஞ்
சாலமதன்படவிழித்தநுதலுங்கண்ணுந்
தடம்புரங்கடீமூட்டுதெனுவுந்தோளுஞ்
சேல்கயல்கள்விளையாடும்பம்பையாறுஞ்
செந்தமிழைத்தடுத்தாண்டதெய்வநாடு
மாலமயின்றமுதீந்தவழகர்சீரு
மாமாத்தூரும்பாடியாடீரூசல். (கூசு)

சந்தவிருத்தம் மதங்கியார்.

சதந்தருவந்தெனவண்டெழுமாதவிதாதவிழ்மாதையின்வாழ்
சதஞ்செய்புரங்கள்முனிந்தபெருந்தகைகமலபதம்பரவா
விதங்கொணடம்புரியங்கைசரந்தொறும்வீழுமனங்கசர
மதங்கிதருந்தனுமண்டலமெங்குமதன்றருமண்டலமே. (கூஎ)

கட்டளைக்கலித்துறை. தழைவிருப்புரைத்தல்.

மேதிக்குலஞ்சொரிபால்கயன்மாந்தும்விரைப்பழன
மாதைக்கடவுள்சடாடவியோமணிப்பேரணியோ
வாதித்தனிவிழியோநகையோசெங்கையம்பினம்போ
போதுற்றசேவடியோவையநீதந்தபூந்தழையே. (கூஅ)

தழைவிருப்புரைத்த லென்பது தலைமகளைத் தழையேற்பி த்து தலைமகனுழைச்சென்று நீ தந்த தழையை யான்சென்று கொடுத்தேன் அதையேற்றுத் தான்கொண்ட வனுராகனத்துநீ ங்கினளெனப் பாங்கி தலைமகனுக்குத் தலைமகளது விருப்பங் கூறுநிற்றல். அதுவருமாறு.

மேதி-பூந்தழையே என்பது,ஐயனே நீ தலைவியின்பொருட் டாக வென்னிடந்தந்த தழை யவளதனு ராகனத்துநீக்குந் தன் மையான் மாதையின்கணுள்ள கடவுளும் ஆதியாந்தன்மையு டையோருமாகிய சிவபெருமானது சடையாகிய காடோ? அன்றி அழகிய பெருமைபொருந்திய சர்ப்பமாகிய வாபரண மோ? ஒப்பற்றவங்கி நேத்திரமோ? சிரிப்போ? செவ்வியகையி ன்கணுள்ள மாயனுய பாணத்தின் பாணமோ? தம்மை வழிப டுமடியா ரர்ச்சிக்கு மலர்களைப்பொருந்திய செவ்வியபாதமோ? இன்னதென் றறிந்திலேன். குழூமிய வெருமைகள் சொரி யும்பாலைக் கயன்மீன்மாந்துஞ் சிறப்புவாய்ந்த வாசனைபொரு ந்திய வயல்சூழ்ந்தமாதையெனக்கூட்டுக. மாதைக்கடவுளெ ன்பதைப் பிறவற்றோடு மொட்டுக. தழையென்பது வினைமு தற்பொருளை யுணர்த்தும் இகரவிகுதிபுணர்ந்து கெட்ட முத னிலை. தழைப்பதென்பது பொருள். சடாடவியென்பது வட மொழிச்சந்தி. சடையை அடவியென்றார் தழை யொற்றுமை நோக்கி. சடை கங்கையின்பெருக்கடக்கிய தன்மைபோல்

இத்தழை தலைவி கண்ணீர்ப்பெருக்கை மாய்த்ததென்பாள் சடாடவியோவென்றும் சருப்பந் தென்றலைப்பருகுந் தன்மை போல் இத்தழை தென்றலால்வருந்துன்பத்தை நீக்கிற்று என்பாள் மணிப்பேரணியோ வென்றும் நுதல்விழி மதனுருவழித்த தன்மைபோல் இத்தழை மதனால்வரு மஞரைநீக்கிய தென்பாள் விழியோவென்றும் நகை முப்புரத்திலடைந்து தம் மாட்டன்புள்ள ஒவ்வொருவரொழிய வேனைப்பகைவராந் தன்மையுள்ள யெல்லோரையும் அழித்ததன்மைபோ லித்தழை அலர்தூற்றல் முதலிய பகைமையால்வரு மிடுக்கணனைத்தை யுநீக்கி நின்மாட்டுள்ள வன்பொன்றையே வளர்த்ததென் பாள் நகையோவென்றும், அம்பினம்பு கடலை வருத்தியதன்மைபோ லித்தழை கடலால்வருந் துன்பத்தை நீக்கியதென் பாள் அம்பினம்போவென்றும், சேவடி திங்களைத் தேய்த்ததன்மைபோ லித்தழை திங்களால்வரும் விகாரத்தை நீக்கியதென்பாள் சேவடியோவென்றுங் கூறினள்.

"மேதிக்குலஞ்சொரி பால்கயல்மாந்தும்" என்பதனால் தல விசேடங் கூறிற்றும். என்னை? ஆமாத்தூரின்கணுள்ள சிவலிங்கத்தின் மீது ஆ பால்சொரிந்து தாம் மேம்பட்ட தன்மையை யறிந்து எருமைகளும், ஆண்டுள்ள கயல்மீன்மாந்தப் பால் சொரிந்ததென விசைதலால். அன்றி ஆண்டுள்ள கயல்மீன்கள் தாமுண்ணும் இழிந்த உணவுகளை ஒழித்து உயர்ந்தபாலை உண்ணுமென்பதனால் ஆண்டுவசிப்போர் மறுமைக்கட் பெறுதற்கரிய முத்தியடைதலே யன்றி, இம்மைக்கண் உலகத்திலுள்ள இன்பமனைத்தும் ஆண்டிருந்து அனுபவித்தற்குரிய தலமெனவும் இயையும். சடாடவியோவெனத் தோன்றிய ஐயம் சேவடியோவென முடிதலால் கேசாதிபாத வர்ணனையுமாயி

ற்று. அன்றியும் மாதைநாதரது அங்கச்செயல்களே விதந்து ஜயமாக நிகழ்ந்தமையால் அவரை அடையப்பெற்றோர் தம்மை நெருக்கும் இடுக்கணனைத்தினும் நீங்கிப் பெறுதற்கரிய பேரின்பத்தின் மகிழ்தலொருதலே, அதுபோனின்றமை அவனுக்கவ்வாறிருத்தலால் தனதுஞரனைத்தினும் நீங்கித் தாங்கொண்டவின்ப மடைத லொருதலையென மகிழ்ந்தாளெனவுமாம். போதுற்ற சேவடி யென்பதற்கு போதின்றன்மைவாய்ந்த செவ்விய அடியெனவும் இயையும். "போதுற்ற சேவடி யென்றார்" தம்மைவழிபடும் அடியாரர்ச்சித்த மலரையேற்று அவர்க்குக் கிடைத்தற்கரிய இன்பத்தைக் கொடுக்கும் இயல்பிற்றாயவடி வழிபாடன்றி மனச்செருக்கோடியற்றிய தக்கனவியுண்ண வியைந்த மதியையுடறேய்த்து அத்தன்மையை நீக்கி, தம்மை வழிபட வியைத்த செப்பமுடைமைநோக்கி.

சந்தவிருத்தம்.

தழையுணர்ந்துணர்ந்துதகவழிந்தழிந்துதனியுழன்றுழன்று
சாயல்போய், வழிமறந்துசென்றுவிழிகுவிந்துநின்றுமனவிரு
ந்தயின்றகானலே, யழிவில்மங்கைகொண்கராரியமங்கைபங்க
ரழகரன்புகொண்டமாதையார், கழிசுரங்கடந்துபழியுடன்ப
டர்ந்தகனகனண்புகொண்டகாதலே. (கூகூ)

கொச்சகக்கலிப்பா. பாண்.

காட்டகந்தொறுந்திரிந்துகண்குழிந்துதடுமாறல்
கேட்டிலையோவிலங்கேசன்கீதத்திற்கவர்ந்ததெலாந்
தீட்டியசீராமாதைச்சிவலோகன்றிருச்செவிகாண்
பாட்டிவீர்படைவீடுபலிதிரியும்பாண்மகனே. (கoo)

## விருத்தம்.

மகனுக்குமாலுக்குமுதலானவையங்கள்பதினலின்வா
யகிலத்தெவ்வுயிருக்குமுயிரானவாமாதையழகற்குமே
நகமுற்றுகடலுங்கடைந்தார்களுயர்நஞ்சமுண்டார்களோ
முகமொக்கவமுதாகவுண்டார்கண்முப்பத்துமுத்தேவரே. ()

திருவாமாத்தூர்க்கலம்பகமுற்றிற்று.

---

ஆமாதைநாதர்திருவடிகளேசரணம்.

உ

கணபதி துணை.

இஃது

ம-ா-ா-ஸ்ரீ, புரசை அஷ்டாவதானம்.

# சபாபதிமுதலியார்

இயற்றிய

## கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

புலனுறப்பல்கிளவியுந்தந்தான்றகலம்பகமெவைக்கும்பொ
ருள்சேர்த்தொன்றென், றிலகுமிரட்டையர்நுவன்றவாமாத்தூர்
க்கலம்பகத்தையினிதாராய்ந்தன், பலர்தரயாழ்ப்பாணமன்னு
சுளிபுரம்வாழ்சரவணமுத்தருந்தவத்தி, னிலவுசிவப்பிரகாச
பண்டிதனன்கச்சியற்றிநிகழ்வித்தானால்.